# கிருபையுள்ள வார்த்தை®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

VOL - 26 | ஜுலை – JULY | 2025

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-


## ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

கொலோசெயர் 3:13



Photo taken @ Munnar, Kerala


ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை 3

பெண்கள் பகுதி 7

வாலிபர் பகுதி 9

சிறுவர் பகுதி 11



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**



ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...



நமது
**'கிருபையின் கீதங்கள்'**
பாடல் புத்தகம்
புதிய பதிப்பு
ஆயத்தமாக உள்ளது.

554 தமிழ் பாடல்கள்
40 ஆங்கில பாடல்கள்
112 சேர்ந்திசை பாடல்கள்
464 பக்கங்கள்

வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும் : **92 4431 4431, 999 426 7004**

**கிருபையுள்ள வார்த்தை**
மன்னிப்பு என்னும் மாமருந்தை மற்றவர்களுக்கு கொடுக்க தூண்டும் வார்த்தை

YouTube
**@graciouswordcoc**


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

- P.C. பிலேமோன் ராஜா



# மன்னிப்பு எனும் மாமருந்து

## FORGIVENESS A GRAET MEDICINE

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், நம் பாவங்களை தமது மிகுந்த இரக்கத்தினாலே மன்னித்து, நம்மை வாழ வைக்கின்ற இறைமைந்தன், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள்.

ஜுலை மாதம் 7ம் தேதியை, உலகளாவிய மன்னிப்பு தினமாக (Global Forgiveness Day) மக்கள் அனுசரிக்கின்றனர். மன்னிப்பின் தேவை மற்றும் மகிமையை பற்றி பைபிள் நமக்கு தெளிவாக அறிவிக்கின்றது. பைபிளை போன்று எந்த ஒரு நூலும் மன்னிப்பை பற்றி இவ்வளவு ஆழமாக பேசியிருக்க முடியாது. ஆகையால் இந்த மாதம் மன்னிப்பை பற்றி பைபிளின் துணைக்கொண்டு தியானம் செய்வோம்.

### மன்னிப்பு என்பதன் பொருள்:

மன்னிப்பு என்பதன் பொருள்தான் என்ன? கிரேக்க மொழியில், 'மன்னிப்பு' என்ற வார்த்தைக்கு பல நுணுக்கங்கள் உள்ளன. அவை பிரதானமாக மூன்று வார்த்தைகளில் வெளிப்படுத்தபட்டுள்ளது. அவற்றில், முதன்மையானது **Aphiemi** (அஃபிமி) இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் மன்னிப்பைக் குறிக்க அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. கடன், பாவம் அல்லது தண்டனையிலிருந்து ஒருவரை விடுவிப்பது என்ற கருத்தை இது கொண்டுள்ளது.

அடுத்ததாக, பயன்படுத்த வார்த்தை **Charidzomai** (சாரிட்ஸோமை). இது **Charis** (கிருபை) என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. இந்தச் சொல் மன்னிப்பின் கருணைமிக்க மற்றும் சம்பாதிக்கப்படாத தன்மையை எடுத்துக்காட்டுகிறது. இது மன்னிப்பை ஒரு பரிசாக வழங்குவதைக் குறிக்கிறது, இது பெரும்பாலும் கருணை என்ற கருத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக, பயன்படுத்த வார்த்தை **Aphesis** (அஃபீசிஸ்) இந்த பெயர்ச்சொல், மன்னிப்பு, விடுதலை அல்லது நிவாரணம் ஆகியவற்றின் செயலைக் குறிக்கிறது. இது பெரும்பாலும் கடவுள் பாவங்களை மன்னிப்பதன் சூழலில் பயன்படுத்தப்படுகிறது.

### மன்னிப்பும் மகிமையான தகப்பனும்:

எபேசியர் 4:32 ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

பைபிள் நம்மை பரம பிதாவை போல மன்னிக்கின்றவர்களாக இருக்கும்படி அறைகூவல்விடுகின்றது. அது என்ன பிதாவை போல மன்னிப்பது? பிதா எப்படி நம்மை மன்னித்தார்? அவர் நம்மை கிறிஸ்துவிற்குள் மன்னித்தார் என்பதிலிருந்து கிறஸ்துவிற்கு வெளியே மன்னிப்பு இல்லை என்பதனை நாம் புரிந்துக்கொள்கின்றோம்.

சங்கீதம் 103:8 கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார். என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். அவருடைய மன்னித்தல் என்பது, நாம் பாவங்களுக்கு தக்க செய்யாமல், நம்மை தண்டியாமல் இருந்து, நம் மீது உள்ள கோபத்தினை நீக்கி, உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ள தாயிருக்கின்றது.

சங்கீதம் 103:11-13 பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். மேலும், அவருடைய மன்னிப்பு என்பது தகப்பன் தன் பிள்ளைகளை இரங்கி மன்னிப்பது போல, நம்மை மன்னித்து, நம் பாவங்களை நாம் தேடினாலும் கண்டுபிடிக்காதபடி, நம்மைவிட்டு விலக்குவதாக இருக்கின்றது.

எபிரெயர் 8:12 ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அதாவது பாவம் செய்ததற்கான அடையாளம் இல்லாமல் செய்துவிடுகின்றார். நாம் செய்த பாவங்களை மன்னித்த கர்த்தர் அதனை நினையாமலிருப்பேன் என்கின்றார். அவரிடத்தில் மன்னித்தலும் மறத்தலும் ஒன்றாக நடைபெறுகின்றது. நாம் மன்னிக்கமட்டோம், அப்படியே மன்னித்தாலும் அதனை மறக்க மாட்டோம். அந்த பாவங்களை மறவாமல், நினைத்துக்கொண்டே இருப்போம் மற்றும் அதனை சொல்லி அவர்களை குத்திகாட்டி, குற்ற உணர்வுடனே, நிம்மதியின்றி வாழ வழி செய்வோம். ஆனால் கர்த்தராகிய நம் பிதா அவ்வாறு செய்வதில்லை. ஆகையால் நாமும் அவரை போலவே மன்னிக்கின்றவர்களாக இருக்க வேண்டும்.

ஏசாயா 55:7 துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன். அவர் அவன்மேல் மனதுருகுவார். நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன். அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். கர்த்தர் நம்மை மன்னிக்க தயை பெருத்தவர் என்று வெளிப்படுத்தியிருக் கின்றார். ஆகையால் மன்னிப்பு என்பது தெய்வீகமான மாபெரும் மாண்பாகும் (பண்பாகும்) என்று நாம் அறியமுடிகின்றது. இந்த தெய்வீக பண்பு மனுக்குலத்திற்கு அத்திவாசியமான தேவையாகும். ஏனெனில், இது எல்லாம்வல்ல கர்த்தராகிய பிதாவினால்; மனுக்குலத்திற்கு தரப்படுகின்ற பாவ நோய் நீக்கியாகும். ஆம்! இது மனிதனில் உள்ள பாவ நோயை குணப்படுத்த கர்த்தர் தருகின்ற ஒரு மாமருந்தாகும். இதனை கர்த்தர் மாத்திரமே தர முடியும். நாம் தண்டனைக்குறியவர்கள், அவரோ மன்னிக்க தயை பெருத்த கர்த்தர். ஆகையால், மன்னிக்கின்ற மனிதர்கள் தங்களில் உள்ள இறைவனை (தெய்வீக பண்பினை) வெளிப்படுகின்றவர்களாக இருக்கின்றனர்.

## மன்னிப்பும் மாசற்ற கிறிஸ்துவும்:

கொலோசெயர் 3:13 ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

நமது ஆண்டவர் இயேசு, நம்மை மன்னித்தது போல நம்மையும் மன்னிக்க சொல்லுகின்றது. பைபிள் ஆண்டவர் இயேசு, தன் முகத்தில் காரி உமிழ்ந்தவர்களை, தன் கண்களை மூடிக்கொண்டு தலையில் கொட்டி கண்டுபிடிக்க சொல்லி நையாண்டி (பரியாசம்) செய்தவர்களை, தன்னை வாரினால் அடித்தவர்களை, தன்னை அறைந்தவர்களை, தன்னை கள்ளன் போல கைது செய்தவர்களை, விசாரனை என்ற பெயரில் அவமானப் படுத்தியவர்களை, மறுதலித்த மற்றும் கைவிட்ட நண்பர்களை, தன்னை சிலுவை சுமக்கும்படி நிர்பந்தம் செய்த வீரர்களை, தன்னை கைகழுவிய அதிகாரத்திலுள்ளவர்களை, தன்னை சிலுவையில் அறைந்தவர்களை, தன்னை ஏறக்குறைய நிர்வாணப்படுத்தி அசிங்கப்படுத்தியவர்களை மற்றும் தாகத்திற்கு தண்ணீர்கேட்ட போது, கசப்பான கடற்காளானை கொடுத்து தன்னை நோகடித்தவர்களை, மற்றும் மரிக்கும் நேரத்தில் தனது மகிமையை புழுதியில் தள்ளியவர்கள் என மன்னிக்க தகுதியற்ற அனைவரையும் மன்னித்தார் மற்றும் பிதாவும்

மன்னிக்கும்படி ஜெபித்தார். லூக்கா 23:34 அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள்.

நாமும் மன்னிக்க தகுதியற்வர்களாக யிருந்து, அவரால் மன்னிப்பை பெற்றவர்கள். சிலர் வேண்டியவர்களை மன்னிப்பார்கள். மற்றவர்களை தண்டிக்கவோ, அவமானப் படுத்தவோ செய்வார்கள். நாமோ மன்னிப்பை பெற தகுதியற்ற நம்மை தாங்கி, நமது குறைபாடுகளை மன்னித்த நமது ஆண்டவர் இயேசு போல, மன்னிக்கின்றவர்களாக இருக்க வேண்டும். மேலும், அவரது மன்னிப்பு என்பது நமது கடந்த நிலையை நீக்குவதாக மட்டுமில்லாமல், நம்மை பிதாவிற்கு முன்பாக கனத்திற்குரிய நிலையில் கொண்டு சேர்த்ததாக இருக்கின்றது.

வெளிப்படுத்தல் 1:6 நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

ஆண்டவர் நமக்கு கொடுத்த மன்னிப்பு என்பது, கீழான நம்மை அந்த நிலையிலிருந்து வெளியே வர வைத்தது மட்டுமல்லாது, நாமே நினைத்துபார்க்க முடியாத மற்றும் சம்பாதிக்க முடியாத உயரத்தில் கொண்டுபோய் சேர்த்து உயர்த்தியதாக இருக்கின்றது. நாம் மன்னித்தவர்களை மட்டமாக நினைத்து நடத்துவோம். ஆண்டவரோ யாரும் மட்டமாக நினைக்க இடமளிக்கமால், மிகவும் உயர்வான நிலையில் கொண்டுபோய் வைத்து, பிதாவாகிய கர்த்தருக்கு முன்பாக அரசர்களும், ஆசாரியர்களுமாக்கிவிட்டார். என்ன ஒரு மன்னிப்பை நாம் பெற்றிருக்கின்றோம். இதே போன்ற மன்னிப்பை தான் நாம் மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பிரியமானவர்களே! தம்மைத் துன்பப் படுத்தியவர்களுக்காக சிலுவையிலே மன்னிப்புக்கேட்டுக் கதறிய கிறிஸ்துவின் சிந்தை நம்மில் நிரம்பி காணப்பட வேண்டும். நமக்கு எதிராக தீங்கிழைத்தவர்கவர்களை தாங்கி, அவர்கள் பேரில் உள்ள குறைபாடுகளை, கிறிஸ்து நமக்கு மன்னித்ததுபோல, நாமும் மன்னிப்போம் (கொலோ 3:13).

## மன்னிப்பும் நாமும்:

மாற்கு 11:25 நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்.

பைபிள் நம்மை மன்னிக்கின்றவர்களாக இருக்க சொல்கின்றது, பிதாவை போலவும், கிறிஸ்துவை போலவும் மன்னிக்க சொல்லுகின்றது. ஏன் நாம் மன்னிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களையும் சொல்லுகின்றது. ஜெபத்தில் பரம பிதாவிடம், நாம் நமக்கான மன்னிப்பை, கேட்கும் முன்பே, மற்றவர்களுக்கு தர வேண்டிய மன்னிப்பை நாம் தருகின்றவர்களாக இருக்க வேண்டும் என்பதே, ஆண்டவர் இயேசு நமக்கு கற்றுக்கொடுத்த, உயர்ந்த வாழ்வியல் போதனை ஆகும்.

மத்தேயு 6:14,15 மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். மன்னிப்பை விதைக்கின்றவர்களே (கொடுக்கின்றவர்களே), மன்னிப்பை அறுக்க (பெற்றுக்கொள்ள) முடியும். விதைக்காததை அறுக்க முடியாது. அதாவது சக மனிதர்களை (சகோதர, சகோதரிகளை) மன்னிக்காதவர்கள், மன்னிக்க தயை பெருத்த பரம தகப்பனிடம் மன்னிப்பை பெற முடியாது என்று ஆண்டவர் இயேசு சொன்னார்.

லூக்கா 17:3,4 உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன்

உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள். அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார். ஒரே நாளில் ஒரே தவறை ஒருவர் உனக்கு எதிராக ஏழு முறை செய்தும், மன்னிப்பு கேட்டால் மறுபடியும் மறுபடியும் மன்னித்துவிடு. இதன் பொருள் தான் என்ன? மன்னிப்பை தள்ளி வழங்காதே, இன்றே மன்னத்துவிடு என்பதாகும். ஏனெனில் நாளை அந்த மன்னிப்பை கேட்க அவரோ, கொடுக்க நாமோ இருப்பது என்பது நிச்சயம் அல்லவே.

மத்தேயு 18:21,22 அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்.

நாம் மற்றவர்களை எத்தனை முறை மன்னிப்பது, அதற்கு ஒரு எல்லை இல்லையா என பேதுருவை போல வினவினால், ஆண்டவர் இயேசுவின் பதில் ஒன்று தான். ஏழுதர மாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும் மன்னியுங்கள் என்பதாக உள்ளது. இதன் பொருள் என்ன நாம் மரிக்கும் வரை, மன்னிக்க வேண்டியவர்களை மன்னித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பதாகும். இப்படி நாம் மன்னிக்கின்றவர் களாக இருந்தால், உலகம் நம்மை ஏளனம் செய்யும், ஏமாளி என்று பழிக்கலாம். ஆனால், கர்த்தருடைய வார்த்தை மன்னிப்பதினை மகிமை என்கின்றது (நீதிமொழிகள் 19:11).

மத்தேயு 18:35 நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார். நாம் மற்றவர்களை மன்னிக்கும் போது, மனப்பூர்வமாகவே மன்னிக்க வேண்டும். அதாவது, அவர்கள் நமக்கு எதிராக செய்த குற்றத்தினை நம் மனதிலிலுந்து எடுத்துப்போட வேண்டும். குற்றத்தினை மாத்திரமல்ல, நாம் அவர்களை மன்னித்தோம் என்பதனை கூட மறந்துவிட வேண்டும். நம்மிடம் அவர்கள் குற்ற உணர்வுடன், தொடர்ந்து வாழ அனுமதிக்க கூடாது. அது தான் பரம பிதாவினை போல மன்னிப்பதாகும் (எபிரெயர் 8:13).

இறுதியாக, பிரியமானவர்களே! நாம் தவறிழைத்தால் மற்றவர்களிடம் மன்னிப்பினை கேட்கவும், மற்றவர்கள் நமக்கெதிரே தவறிழைத்தால் மன்னிப்பினை கொடுக்கவும் நம்மில் எந்த ஒரு தயக்கமும் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில், மன்னிப்பு என்று ஒன்று இருந்திராவிட்டால் இன்று நாம் தேவனுடைய பிள்ளைகளாக வாழ்ந்து கொண்டிருக்க முடியுமா? முடியாதல்லவா. சிந்திப்போம் செயல்படுவோம்.

## மன்னிப்போம் மறப்போம்

★ மற்றவர்களின் தவறுகளை மாத்திரமல்ல
நாம் மன்னித்தோம் என்பதனையும் மறப்போம்
★ மன்னிப்பை அளித்துப் பாருங்கள்
மனபாரம் குறையும்...
★ மன்னிப்பை கேட்டுப் பாருங்கள்....
பகையெல்லாம் மறையும்...
★ மன்னிப்பவரோடு இருந்து பாருங்கள்.....
குதுகலம் வந்து சேரும்...
★ மன்னிப்பை உணர்ந்து பாருங்கள்....
மனசெல்லாம் லேசா தோணும்...
★ மன்னிப்பின் வழியைத் தேடி பாருங்கள்....
முட்டுக்கட்டைகள் முடங்கிப் போகும்...
★ மன்னிப்புடன் இணைந்துப் பாருங்கள்....
இதயங்கள் களிப்படையும்....
★ மன்னிப்பவராக வாழ்ந்து பாருங்கள்.....
வாழ்வில் வசந்தம் வந்து தாலாட்டும்...
வந்த நோயும் கடந்து போகும்...
(மன்னிப்பு சகலத்திற்கும் நல்ல மருந்து)
★ இயேசு கிறிஸ்துவின் அன்பில் பிறரை மன்னித்து வாழுவோம்
★ இயேசு கிறிஸ்துவுடன் இணைந்து வாழுவோம்.!

– அன்புடன், ஆசிரியர்

# சப்பிராள்

## இவளிடமிருந்து ஓர் பாடம்

பிரியமானவர்களே அன்பர் இயேசு ராஜாவின் பெயரில் வாழ்த்துக்கள் ஜெபங்கள்.!

ஒவ்வொரு மாதமும் வேதாகமத்திலிருந்து பெண்களைப் பற்றி படித்துக் கொண்டு வருகிறோம். அவர்கள் தேவனுக்குப் பிரியமான காரியங்கள் என்ன செய்தார்கள் என்றும், அதினால் அவர்கள் வாழ்வில் கிடைத்த வெற்றிகளையும், ஆசீர்வாதங்களையும் குறித்துப் படித்தோம். சில பெண்களிடத்திலிருந்து கிறிஸ்தவர் களாகிய நமக்கு வேண்டாத குணாதிசயங்களைக் குறித்து படித்துத் தெரிந்து கொள்வோம்.

அதுபோலவே இந்த மாதம் அப். 5ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள பெண் சப்பிராளிடத்திலிருந்து ஒரு கிறிஸ்தவ பெண்கள் என்ன செய்யக்கூடாது? என்பதைத் தெரிந்து கொள்வோம்.

1) சாத்தானுக்குச் செவிகொடுக்காதீர்கள்.
2) ஆவிக்குரிய காரியங்களில் பெலவீனமான சிந்தை இருக்கக்கூடாது
3) தேவனிடம் இரகசியம் வேண்டாம்

ஆம், பிரியமானவர்களே! இந்தப் பெண் ஒரு கிறிஸ்தவ சகோதரியாக இருந்தும்கூட கர்த்தருடைய வார்த்தையை பேதுருவின் மூலமாக கேட்டு, அதன் நடக்க வேண்டும் என்று முடிவு எடுத்தும் தன் ஆத்துமாவை பணத்திற்காகவும், தற்புகழுக்காகவும் இழந்துவிட்டாள்.

சப்பிராள் தன் கணவனோடு சேர்ந்து தேவனுக்கு கொடுக்க வேண்டும் என்று முடிவு எடுத்தும் பிசாசின் தந்திரத்தினாலே முழுமையாக தேவனிடத்திற்கு கொடுக்க வேண்டும் என்று எண்ணம் அவளிடத்தில் மாறிவிட்டது. தன்னுடைய பணஆசையினாலே (1 தீமோ. 6:10) தன் உயிரையும், ஆத்துமாவையும் இழந்து, சாத்தானுக்கு தன் இருதயத்தில் இடம் கொடுத்து பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம் செய்தததினாலே (அப். 5:3) பாவத்தின் சம்பளம் மரணத்தை அடைந்தாள். அதினால் நாம் பிசாசுக்கு இடங்கொடாமல் இருப்போம். (எபே. 4:27).

**ஆவிக்குரிய காரியங்களில் பெலவீனமான சிந்தை இருக்கக்கூடாது:**

நீங்கள் ஒருவருக்காக ஒருவர் உதவி செய்து சாத்தானை எதிர்த்து நிற்க வேண்டும். ஒருவேளை உங்களில் ஒருவர் பேராசைக்கும், மாய்மாலத்திற்கும் விழுந்துவிட்டாலும் கூட மற்றொருவர் அதை புரிந்து கொண்டு, அதிலிருந்து எப்படி வெளிவர வேண்டும் என்று வசனத்தின் மூலமாக தெரிந்துக்கொண்டு, அதை நாம் செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு பாவத்தை கண்டு கொள்ளாமல் இருப்பது அல்லது பாவத்திற்கு துணைபோவது என்பது வசனத்திற்கு எதிரான செயலாக இருக்கும். (எபேசியர் 5:17-33) வசனம் சொல்லுகிறது பெண்கள் இயற்கையிலேயே பலவீனமானவள் தான் (1 பேதுரு 3:7). எனவே நாம் அதிகமாக ஜெபத்தின் மூலமாகவும், வசனத்தின் மூலமாகவும் நம்மை நாமே பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

படைப்பின்போது நடந்ததைப்போல ஒருவர் மீது ஒருவர் பழிசொல்வதும், என்னுடைய தீமைக்கு காரணம் இவர்கள்தான் என்று மற்றொருவர் மீது குற்றம் சொல்வதும் தேவனுக்கு முன்பாக நீதியாக இருக்காது. ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டுவதை நிறுத்திவிட்டு, வசனத்தின்மூலமாகவும், ஜெபத்தின்மூலமாகவும்

(தொடர்ச்சி... 8ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

### மாதம் ஒரு "பூ"

### செங்காந்தள்



செங்காந்தள் அல்லது காந்தள் (Gloriosa superba இலங்கை வழக்கு: கார்த்திகைப் பூ) என்பது ஒரு காந்தள் பேரினத்தைச் சேர்ந்த தாவரமாகும். இது வேலிகளிலும், பாதையோரங்களிலும், காட்டோரங்களிலும் படர்ந்து நிமிர்ந்து அழகிய விரல்கள் போலவும், சுடர்கள் போலவும் காட்சியளிக்கும்.

அனைத்துப் பகுதிகளும் கோல்சிசினே (colchicine) எனும் அல்கலோயட்கள் நிறைந்தது. அதனால் இவற்றை உட்கொண்டால் மரணம் சம்பவிக்கும் வாய்ப்புள்ளது. குறிப்பாக இதன் வேர் மிகுந்த நச்சுத் தன்மை கொண்டது. இதன் இலை மற்றும் தண்டு நம்மேல் பட்டால் தோலில் அரிப்பு உண்டாகும். இது கார்த்திகைப்பூ என்றும் அறியப்படுகிறது. கண்வலிக்கிழங்கு எனும் கிழங்கு வகை மூலிகையானது காந்தள் மலர்ச் செடியிலிருந்து பெறப்படுகிறது. அச்செடியின் வேர்ப்பகுதியே கண்வலிக்கிழங்கு ஆகும். இக்கிழங்கு ஆனது கலைப்பைக் கிழங்கு, வெண்தோன்றிக் கிழங்கு, கார்த்திகைக் கிழங்கு என்று பல பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இக்கிழங்கில் உள்ள கோல்ச்சிசினும் சூப்பர்பைனும் மருத்துவக் கூறுகளாகும். இதன் பல்வேறு மருத்துவப் பயன்பாடுகள் இந்தியாவில் இந்திய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஆப்ரிக்காவிலும் இது பயன்படுத்தப்படுகிறது.

ஒருவரையொருவர் தேற்றுங்கள். (கலா. 6:2). கர்த்தரை நேசிப்பவர்கள் கர்த்தருக்காக சாத்தானை எதிர்த்து நிற்க வேண்டும். அப்பொழுது அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான். (யாக். 4:7).

**தேவனிடம் ரகசியம் (மறைவு) இருக்கக் கூடாது:**

நாம் எப்பொழுது ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டியது நாம் கடவுளிடம் ஒளிவு மறைவு வைக்க முடியாது. நமது வெளித்தோற்றத்தை வைத்து ஏமாறுபவர் அவர் அல்ல. நாம் நம் நண்பர்களையும், குடும்பத்தாரையும், நம் தோற்றத்தின் மூலமாக ஏமாற்ற முடியும். ஆனால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிற கர்த்தரை நாம் ஏமாற்ற முடியாது. பிரியமானவர்களே மனுஷர்களுக்கு முன்பாக நாம் எவ்வளவு வேஷம் போட்டாலும் தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் (1 சாமுவேல் 16:7). எனவே, நாம் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, ஆவிக்குரிய வாழ்வை உயர்த்தி, நம்முடைய இருதயங்களை ஸ்திரப்படுத்துவோம்.

பிரியமானவர்களே! நம்மை தவறான நோக்கத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும். நம்முடைய தவறான நோக்கம் நமக்கு நற்காரியங்களை கொண்டு வந்து சேர்த்துவிடாது. சப்பிராளும் கூட தங்கள் புகழ்ச்சியும், தங்களுடைய மேன்மையும் குறித்து மட்டுமே கவலைப்பட்டாள். தேவனுடைய பிள்ளைகளிடத்தில் தேவனுக்காக தாங்கள் செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்ததை மாற்றுகிறோமே என்ற கவலை அவளுக்கு சிறிதும் இல்லை. அப்போஸ்தலர்களுக்கு முன்பாக தன் கணவன் செய்த காரியங்களை அறியாமல் அவளும் பேதுருவிடம் தாங்கள் செய்தவைகளை மறைத்து பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பொய் சொல்ல துணிந்ததினாலே மரித்தாள் (அப். 5:8,9). “தேவசமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு......” (பிரசங்கி 5:2,4,5).

பிரியமானவர்களே! நாமும் இந்த சப்பிராளைப்போல சாத்தானுக்கு நமது இருதயத்திலே இடங் கொடுக்காமலும், ஆவிக்குரிய காரியங்களில் நாம் பெலவீனமாக இல்லாமல், தேவனுக்கு முன்பாக எந்த ஒரு காரியத்தையும் மறைக்காமலும் வாழ்வோம். இல்லையென்றால் நமது ஆத்துமாவையும், தேவனிடமிருந்து வருகின்ற நன்மைகளையும் நாம் நம் வாழ்வில் இழந்துவிடுவோம். ஏனெனில், (யாக். 4:17) நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பிதாவினிடத்திலிருந்து வருகிறது.

– சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

## பொதுவான செய்திகள்

### சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் தமிழில் எழுதப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இந்நூல் ‘பாட்டிடையிட்ட தொடர்நிலைச் செய்யுள்’ எனவும் வழங்கப்படுகிறது. இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றினையும் காணலாம்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பர். ஏனைய நூல்கள் அரசனையோ தெய்வங்களையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டிருக்க சிலப்பதிகாரம் கோவலன் என்ற குடிமகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டதால் இதனைக் ‘குடிமக்கள் காப்பியம்’ என்றும் கூறுவர். இன்பியலும் துன்பியலும் கலந்து எழுதப்பட்ட இந்நூலை இயற்றியவர் இளங்கோ அடிகள் என்பவராவார். இவர் புகழ் பெற்ற சேரமன்னன் செங்குட்டுவனுடைய தம்பி எனக் கருதப்படுகின்றது. ‘சிலப்பதிகாரம்’ என்ற சொல் சிலம்பு, அதிகாரம் என்ற இரு சொற்களால் ஆனது. சிலம்பு காரணமாக விளைந்த கதை ஆனதால் சிலப்பதிகாரம் ஆயிற்று.

தேவாரம், திவ்வியப் பிரபந்தம், கம்பராமாயணம், சீவகசிந்தாமணி முதலான நூல்கள் விருத்தப்பா என்னும் பா வகையைத் தோற்றுவிப்பதற்கு முன்னர் வழக்கில் இருந்த ஆசிரியப்பா நடையில் அமைந்துள்ள சிலப்பதிகாரமும், மணிமேகலையும் அந்த நூல்களுக்கு முந்தியவை.

**நூலமைப்பு:**

காப்பியங்களுக்கான இலக்கண அமைப்பு அனைத்தும் பொருந்தி வரும்படி இயற்றப்பட்ட காப்பியமாகும். காவிரி, வைகை முதலான ஆறுகளும் புகார், உறந்தை, மதுரை, வஞ்சி முதலான நகரங்களும், குரவைக் கூத்து முதலிய கூத்துகளும், திருமால் முதலிய தெய்வங்களும், அடர்ந்து வளர்ந்த பெருங்காடுகளும் இந்நூலில் நன்கு வருணிக்கப்பட்டுள்ளன. அக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றிய செய்திகள் இதில் இடம் பெற்றுள்ளன. சிலப்பதிகாரப் பதிகம் இதனை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனக் குறிக்கின்றது.

இடையிடையே உரைகளும் வரிப்பாட்டுகளும் கலந்து வந்துள்ளன. பொருட்செறிவு, தெளிவான இனிய எளிய நடையுடன், அணிகள் பல பொதிந்த தமிழின் வளமான நூலாகும். இறையனார் களவியல் உரைகாரர், இளம்பூரனார் போன்ற உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட பெருமை உடையது.

தமிழறிஞர்களால் மிகுதியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நூல் இதுவேயாகும். சிலப்பதிகாரம், நூல் முகத்தில் உரைப் பாட்டினையும், கானல் வரி, வேட்டுவ வரி, ஆற்றுவரி, ஊசல்வரி, கண்புகுவரி என்னும் இசைப்பாட்டுகளும் நிறைந்தது. புகார்க் காண்டம், மதுரைக் காண்டம் மற்றும் வஞ்சிக் காண்டம் எனும் உட்பகுப்புகளால் பிரிக்கப்பட்டுள்ளது.

தொடரும்...

# திரளான மீன்களைப் பிடிக்கச் செய்தார்

**யோவான் 21:1–9**

அன்பின் வாலிப தம்பி, தங்கைகளே! உங்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த மாதம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து திரளான மீன்களைப் பிடிக்க செய்த சம்பவத்தை பார்க்கவிருக்கிறோம்.

### திபேரியாக் கடற்கரையில் சீஷர்கள்:

யோவான்21:1,2 இவைகளுக்குப் பின்பு இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்;

இந்த சம்பவம் இந்த ஒரு சுவிசேஷத்தில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கலிலேயாக் கடல் இயேசுவின் ஊழியத்தோடும் அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னரும் கூட இணைக்கப்பட்ட ஒரு இடமாக உள்ளது. இது சீடர்களுக்கு மிகவும் அறிமுகமான இடம். இயேசு சீடர்களிடம் கலிலேயாவுக்குச் செல்லுங்கள், நான் உங்களை அங்கே சந்திப்பேன் என்று கூறியிருந்தார். இயேசு உயிர்த்தெழுந்தபின் வாரத்தின் முதல்நாளில் சீஷர்கள் யூதர்களுக்குப் பயந்து கதவுகளைப் பூட்டிக்கொண்டு உள்ளே இருந்தனர். அப்பொழுது இயேசு அவர்கள் நடுவில் நின்று அவர்களுக்கு ஆணி கடாவப்பயட்ட கைகளையும், விலாவையும் காண்பித்தார் சீஷர்களும் சந்தோஷப்பட்டனர் (யோவான் 20:19, 20). அங்கு கூடியிருந்த ஒவ்வொருவரும் பிரச்சனைக்குரியவர்களாக இருந்தவர்கள்.

பேதுருவுக்கு இயேசுவுக்காக மனதில் வைராக்கியம் உண்டு. ஆனால் அடிக்கடி தவறுகிறவர். வழி விலகக் கூடியவர். தோமா எதையும் சந்தேகக் கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடியவர். நாத்தான்வேல் ஞானம் உள்ளவர் தான். ஆனாலும் நாசரேத்திலிருந்து ஒரு நன்மை வரக் கூடுமோ என்று கேள்வி கேட்டவர். யாக்கோபும், யோவானும் இடி முழக்கத்தின் மக்கள். இது போக இரண்டு சீஷர்களின் பெயர்கள் கொடுக்கப்படவில்லை. இவர்கள் அனைவரும் இயேசு வருவார் என்று அங்கு காத்துக் கொண்டிருந்தனர். இங்கு இயேசு 12 சீஷர்களுக்கல்ல, ஏழு சீஷர்களுக்கு மட்டுமே தரிசனமானார். இதில் சீமோன் பேதுருவின் பெயருக்கு அடுத்தது தோமாவின் பெயர் வருகிறது. இதுவரை தோமா என்ற பெயர் கடைசியில் இருக்கும். தோமாவின் தோல்வி இயேசுவை நெருங்கச் செய்தது.

### கடற்கரையில் இயேசு:

யோவான் 21:3,4 சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி; மீன்பிடிக்கப் போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்; நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படகிலேறினார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற்காலமானபோது இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந் தார்கள்.

இயேசு சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடெழுந்தார். இதை சீஷர்கள் முழுமையாக விசுவாசிக்காத படியால், இயேசு வரவில்லை என்றவுடன் பொறுமை இழந்த பேதுரு தன்னுடைய அழைப்பை மறந்து, மற்றவர்களிடம் நான் மீன் பிடிக்கப் போகிறேன் என்றான். மற்றவர்களும் அவர்கள் அழைப்பை மறந்து, நாங்களும் உன்னோடு வருகிறோம் என்றதால், அனைவரும் பேதுருவுடன் மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்றனர். இவர்கள் மீன் பிடிக்கச் சென்றதால் பின்மாற்றமாகி விட்டார்கள. குடும்பத் தேவைகளுக்காக மீன் பிடிக்கப் போயிருக்கலாம். மீனவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாயிருப்பார்கள். சும்மாயிருக்க மாட்டார்கள். தன்னுடைய அன்றாடத் தேவைகளை கூட சந்திக்க இயலாதவர்களைக் கொண்டுதான் இயேசு உலகத்தைக் கலக்கச் செய்தார். இயேசுவின் ஊழியத்திற்கு வெறுமையும், வறுமையும் தடையாக இருக்க முடியாது.

அவர்கள் அந்த இரவு முழுதும் பிரயாசப் பட்டும் மீன்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. மீன்பிடித் தொழிலில் திறமைசாலிகளாக இருந்தும், அவர்கள் தோல்வி அடைந்ததால் சோர்ந்து போனார்கள்.

ஆனால் இது தேவனுடைய அநாதி திட்டத்தின்படியும் தீர்மானத்தின்படியும் நடந்ததாகும். இயேசு நம்மை சந்திக்கும் இடமே தோல்வியின் களத்தில்தான். இது இயேசு பரலோகத்திற்குப் போவதற்கு முன் செய்த அற்புதம். லூக்கா 5:1-11 ல் பேதுருவின் படகை இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பத்தில் நிரப்பி அற்புதம் செய்தார். இந்த அற்புதம் இயேசுவின் ஊழியத்தில் செய்த கடைசி அற்புதம். இயேசுவின் ஊழியத்தின் இயேசு உயிர்த்தெழுந்த பின் திபேரியா கடற்கரையில் மறுபடியும் அந்த விடியற்காலையில் மகிமை அடைந்த சரீரத்தோடு நின்றார். சீஷர்களுக்குக் கரையில் நின்று கொண்டிருப்பது இயேசு என்று தெரியவில்லை.அத்தனை தூரத்தில் அவர்கள் படகில் சென்று கொண்டிருந்தனர்.

இயேசு என்று அவர்கள் அறியாதபடி அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது (லூக்கா 24 : 16). இதேபோல் மகதலேனா மரியாள் இயேசு உயிரோடெழுந்ததை அறியாமல், கல்லறையில் அவரைக் காணாமல் கல்லறையினருகில் அழுதுகொண்டு நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது இயேசுவோ அவள் பின்னால் நின்று கொண்டிருந்தார். ஆனால் அவரை இயேசு என்று அவள் அறியாதிருந்தாள் (யோவான் 20:14). மீன் பிடிக்கும் தொழிலில் இருந்து மனிதரை பிடிக்கும் தொழிலுக்கென்று ஏற்படுத்தப்பட்ட பேதுருவும் மற்றவர்களும் (மத்தேயு 4:18-20) மீண்டும் பழைய தொழிலுக்குச் சென்றதை இயேசு பார்த்தார். இந்தத் தடவை இயேசு கடலின்மேல் நடந்து வராமல் கடலின் கரையிலே நின்று சீஷர்களுக்கு காத்திருந்தார்.

ஆனால் அவர்கள் யாரையும் இயேசு கடிந்து கொள்ளவில்லை. இயேசு அவர்களின் விசுவாசத்தை அதிகரிக்கவும், தன்னுடைய திட்டத்தை அவர்களுக்குள் செயல்பட வைக்கவும் நினைவுபடுத்தவும் அங்கு வந்தார். நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், அவர் ஒரு குறிக்கோளை வைத்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கையை அவர் நடத்த விரும்புகிறார். நம்முடைய திறமையினால் அல்ல, ஆண்டவருடைய வல்லமையினால் விசுவாசிகளாகிய நாம் குறைவுகளின் மத்தியிலும் முடிவுபரியந்தம் காத்துக் கொள்ளப்படப் போகிறோம். இயேசுவை விட்டு பின்வாங்கினதினால் சீஷர்களுக்கு மீன்கள் கிடைக்கவில்லை. நாமும் தேவன் நம்மை அழைத்த அழைப்பை உதறித்தள்ளிவிட்டு பின் வாங்கிப்போனால், தேவ ஆசீர்வாதங்களை தேவனிடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

தொடரும்...

– உங்கள் அண்ணன் **JP**

# Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program:** **Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

சிறுவர் பகுதி

# மரணத்தைக் காணாத ஏனோக்கு

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைங்களா! எல்லாரும் எப்படி இருக்கீங்க? இந்த மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி சொன்னீங்களா? பரிசுத்த தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கர்த்தருக்குப் பிரியமான செல்லப்பிள்ளைகளா!!! பொதுவாக எந்த ஒரு மனிதன் பிறந்தாலும், எவருக்கும் மரணம் என்ற ஒன்று உண்டென்று நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம்.

பைபிள் வரலாற்றிலே பதிவு செய்யப்பட்டதிலேயே அதிக வருடங்கள் அதாவது 969 வருடங்கள் உயிரோடு இருந்த மெத்துசலாவினுடைய தந்தைதான் ஏனோக்கு. ஏனோக்கு பூமியிலே 365 வருடங்கள் வாழ்ந்திருந்தார். கர்த்தர் எதற்காக ஏனோக்கை உயிரோடு மேலே எடுத்துக்கொண்டார் என்று நாம் பார்க்கலாம்.

ஏனோக்கு கர்த்தரிடம் மிகவும் நெருங்கிய உறவு வைத்திருந்தார். கர்த்தருடன் 300 வருடங்கள் சஞ்சரித்தார் என்று பைபிளில் பதிவு செய்யப் பட்டுள்ளது. எனக்கு பிரியமான செல்லங்களா!. ஏனோக்கு கர்த்தரிடம் எந்த அளவிற்கு உறவு வைத்திருந்தார் என்று பாருங்களேன். 300 வருடங்கள் கர்த்தரோடு செலவழித்துள்ளார். ஏனோக்கை கர்த்தர் ஆசீர்வதித்ததற்கான முதல் காரணம் இதுதான். நாம் எவ்வளவு நேரம் கர்த்தரோடு இருக்கிறோம்? சபை தொழுகைக்கு போறோம். நேரம் கிடைத்தால் வேத ஆராய்ச்சி வகுப்பிற்கு செல்கிறோம் அவ்வளவுதான் நாம் கர்த்தரோடு செலவிடும் நேரம். எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்கின்றதோ அப்பொழுதெல்லாம் கர்த்தரோடு இருக்கவேண்டும். கர்த்தர் எங்கே இருக்கிறார்? கர்த்தர் நம்முடைய பைபிள் வசனங்களில் இருந்து நம்முடன் பேசுகிறார்.நாம் ஜெபத்தின் மூலமாக அவரிடம் பேசுகிறோம். மாலையில் பள்ளியில் அறிவிக்கப்பட்ட வீட்டுபாடங்களை படிப்பதற்கு முன்னதாக. நம்முடைய கர்த்தரோடு பேசி, அவர் சொல்கின்ற பைபிள் வசனங்களை வாசித்து நாமும் ஏனோக்கைப்போல அவரோடு நேரம் செலவிடுவோம்.

ஏனோக்கு கர்த்தருக்குப் பிரியமான மனிதன் என்று சாட்சி பெற்றிருந்தார். கர்த்தருக்குப் பிரியமாக எப்படி நடந்துகொள்வது? என்ற ஒரு கேள்வி உங்களுடைய இருதயத்தில் வருகின்றது அல்லவா. உங்களுடைய அப்பாவும் அம்மாவும் உங்களை எப்பொழுது கொஞ்சுவார்கள்? நீங்கள் அவர்களுக்கு புடிச்ச மாதிரி நடந்துகொள்ளும் போதுதானே. அதாவது நம்முடைய அப்பாவும் அம்மாவும் நம்மிடம் நல்லா படிக்கணும், பெரியவர்களுக்கு மரியாதை தரவேண்டும். மொபைல் போன் பயன்படுத்தக் கூடாது. சபையில் சத்தம் போடக்கூடாது போன்ற சில காரியங்களை சொல்கிறார்கள் அல்லவா. அதையெல்லாம் நாம் கடைபிடித்தால் தானே நம்முடைய அப்பாவிற்கும் அம்மாவிற்கும் பிரியமான பிள்ளைகளாக இருக்கிறோம் அதுபோலத்தான். கர்த்தர் பைபிள் வசனங்கள் மூலமாக நம்மிடம் பேசுகிறார். கர்த்தர் நம்மிடம் சொல்கின்ற காரியங்களை பின்பற்றினால் மட்டுமே நாமும் கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகளாக இருப்போம். பிள்ளைங்களா நாமும் கர்த்தருக்கு பிரியமான பிள்ளை என்று அனைவரும் சொல்லும்படி நடந்துகொள்வோமா!



முதலாவது கர்த்தரோடு அதிக நேரம் செலவிட வேண்டும். இரண்டாவது கர்த்தர் சொன்ன வசனங்களின்படி நடக்கவேண்டும். அப்பொழுது நாமும் நித்தியமான அழிவில்லாத பரலோக ராஜ்ஜியத்தைப் பெறுவோம்.

**மனப்பாட வசனம் : நீதிமொழிகள் 4:7** "ஞானமே முக்கியம். ஞானத்தைச் சம்பாதி: என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாத்தித்துக் கொள்."

**– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்**


## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

# தாவீது அரசனாக முடி சூட்டப்படுதல்

ஹாய்! குட்டிச் செல்லங்களா நன்றாக உள்ளீர்களா? இயேசு கிறிஸ்து உங்களை அளவுக்கு அதிகமாக நேசிக்கிறார். இயேசுவின் அளவில்லா அன்பு உங்களோடு இருப்பதாக. இந்த ஆண்டில் அரை ஆண்டுகள் கடந்து விட்டது இந்த அரை ஆண்டுகளிலும் இயேசுவோடு மகிழ்ச்சியாக இருந்தீர்களா? அப்படிபோல கர்த்தரோடு மகிழ்ச்சியாகவும், நம்பிக்கையாகவும் இருந்து கர்த்தராலே அரசனாக முடிசூட்டப்பட்ட தாவீது அண்ணாவை குறித்து இந்த மாதம் படிக்கலாம்.

பெத்தலகேம் என்னும் ஊரிலே ஈசாய் என்னும் பேருள்ள ஒரு தாத்தா இருந்தார். அவருக்கு 8 பிள்ளைகள் இருந்தார்கள் ஈசாய் தாத்தாவினுடைய முதல் மூன்று பிள்ளைகள் இஸ்ரேல் ராணுவத்தில் ராணுவ வீரர்களாக இருந்தார்கள். தாவீது அண்ணனோ எல்லாருக்கும் கடைசி பிள்ளையாக இருந்து தன் அப்பாவின் ஆடுகளை மேய்த்துக் கொண்டு வந்தான். அந்த சமயத்தில் காத் என்னும் ஊரிலே கோலியாத் என்னும் பெயரில் ஒரு வீரன் பெலிஸ்தியரின் ராணுவத்திலிருந்து புறப்பட்டு வந்து எல்லாருக்கும் நடுவே நின்றான். அவன் எல்லாரையும் காட்டிலும் மிகவும் உயரமான மனிதனாக இருந்தான். அவனுடைய உயரத்தையும் பலத்தையும் கண்டு கர்த்தருடைய மக்களாகிய இஸ்ரயேலர்கள் மிகவும் பயந்து நின்றார்கள்.

அந்த சமயத்தில் ஈசாய் தாத்தா ஆடு மேய்த்துக் கொண்டிருந்த தாவீது அண்ணாவை அழைத்து நீ போய் ராணுவத்தில் உள்ள மூன்று அண்ணன்களையும் சந்தித்து அவர்களுக்கு இந்த உணவு பதார்த்தங்களை கொடுத்து நலம் விசாரித்து விட்டு திரும்பி வா என்று தன் மகனை அனுப்பினார். தாவீது அண்ணன் தன் தகப்பனுக்கு கீழ்ப்படிந்து ராணுவத்தில் உள்ள தன் மூன்று அண்ணன்களையும் சந்திக்க சென்றார். அப்பொழுதுதான் கோலியாத் என்னும் உயர்ந்த மனிதன் கர்த்தருடைய மக்களுக்கு விரோதமாகவும், கர்த்தரையும் நிந்தித்து பேசிக் கொண்டிருந்தான். அதை



தாவீது கேட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது தாவீது அண்ணன் இஸ்ரயேலின் ராஜாவாகிய சவுலின் இடத்தில் போய், இஸ்ரயேலின் தேவனுடைய ராணுவத்தை நிந்தித்து பேசுவதற்கு இவன் எம்மாத்திரம், சர்வ வல்லமையுள்ள கர்த்தர் காத் ஊரானாகிய கோலியாத்தை என் கையில் ஒப்புக்கொடுத்து இஸ்ரயேலுக்கு மாபெரும் வெற்றி சிறக்க செய்வார் என்றான்.

தாவீது அண்ணன் தன் தடியைப் பிடித்துக் கொண்டு ஆற்றில் இருக்கிற ஐந்து கூலாங்கல்லுகளை தெரிந்து கொண்டு அவைகளை தன்னுடைய பையிலே போட்டு கவணை தன் கையிலே பிடித்துக்கொண்டு அந்த கோலியாத்தண்டையிலே போனான். அப்பொழுது கோலியாத் தாவீது அண்ணன் கிட்ட வந்து அவனைப் பார்த்து ஏளனமாக பேசினான். அப்பொழுது தாவீது கோலியாத்தை பார்த்து நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய், நானோ நீ நிந்தித்த இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன் என்றான். அப்பொழுது தாவீது தன் பையில் உள்ள கல்லை எடுத்து, கவணிலே வைத்து சுழற்றி கோலியாத்தின் நெற்றியிலே பட எறிந்தான் அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்து போனதினால் அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான்.

ஆம் குழந்தைகளே நீங்கள் சற்று கவனியுங்கள். தாவீது அண்ணன் இளம்வாலிபராக இருந்தார். ஆயினும், தாவீது அண்ணா தன் பலத்தினாலோ அல்லது தன் கையில் உள்ள கவண்கல் இருப்பதினாலோ அவனை வீழ்த்தி விடலாம் என்று நினைக்கவில்லை. மாறாக சேனைகளின் கர்த்தருடைய பலத்தினாலே அவனை வீழ்த்தினான். அதனாலே கர்த்தர் தாவீது அண்ணாவை இஸ்ரேலுக்கு ராஜாவாக்கினார்.

பிள்ளைகளே நீங்களும் உங்கள் சொந்த அறிவையும் நம்மை சுற்றி அநேகர் இருக்கிறார்கள் என்று அவர்கள் பலத்தையும் நம்பாமல் கர்த்தரை சார்ந்து வாழும் போது உங்களுக்கு எதிரே இருக்கும் எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும் அதை கோலியாத்தை போல கர்த்தர் ஒன்றுமில்லாமல் ஆக்குவார். கர்த்தர் உங்களை தாவீது அண்ணாவைப் போல உயர்த்துவாராக. ஆமென்.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 118:6**

"கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?"

– சகோ. பீட்டர்

## சிறுவர் பகுதி


# ஆபிரகாமின் உபசரிப்பும், சாராளின் நகைப்பும்

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

ஆபிரகாமுக்கு தொண்ணூற்றொன்பது (99) வயது இருக்கும்போது, அவர் மம்ரே என்ற இடத்தில் கூடாரம் போட்டு வாழ்ந்து வந்தார். ஒருநாள் பகல்வேளையில் கூடாரவாசலில் உட்கார்ந்திருந்தார். அப்படியே தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது மூன்று (3) பேர் அவருக்கு எதிராக நின்றார்கள். ஆபிரகாம் அவர்களை பார்த்தவுடனேயே ஓடிபோய் தரைமட்டும் குனிந்து அவர்களிடம் என்ன சொன்னார் தெரியுமா? "ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியேனைவிட்டுக் கடந்துபோக வேண்டாம். கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறேன், உங்கள் கால்களைக் கழுவி விட்டு, மரத்தடியில் இளைப்பாறுங்கள். உங்களுக்கு சாப்பிடுவதற்கு கொஞ்சம் அப்பங்களையும் கொண்டு வருகிறேன். அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போங்கள், இதற்காகவே தான் நீங்கள் நான் வாழும் இடத்தின் வழியாக வந்திருக்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: நீர் சொன்னபடி செய்யும் என்றார்கள்"

உடனே ஆபிரகாம் தன் மனைவியான சாராளிடத்தில் சென்று: நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து, அப்பம் சுடு என்று சொல்லிவிட்டு, மாட்டு மந்தைக்கு ஓடி, ஒரு நல்ல இளங்கன்றைப் பிடித்து, தன் வேலைக்காரர் கையிலே கொடுத்து சீக்கிரம் சமைக்கச் சொன்னார். ஆபிரகாம் சமைத்த உணவுகளை அந்த மூன்று நபர்களுக்கு முன்பாக கொண்டு வைத்தார். அவர்கள் புசித்தார்கள்.

அவர்கள் ஆபிரகாமினுடைய மனைவியாகிய சாராளைப் பற்றி விசாரித்தார்கள். அதுமட்டுமல்ல தேவன் குறித்திருக்கிற காலத்திட்டத்தில் மீண்டும் திரும்ப வருவேன். அப்பொழுது உன் மனைவிக்கு ஒரு குமாரன் (மகன்) இருப்பான் என்றார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சாராள் தன் உள்ளத்திலே நகைத்து, நானும் என் கணவரும் கிழவியும், முதிர்வயதுள்ளவர்களாகவும் இருக்கும்போது எங்களுக்கு எப்படி ஒரு பிள்ளை பிறக்கும்? என்று எண்ணினாள்.



அதற்கு அவர் ஆபிரகாமை நோக்கி: சாராள் நகைத்து, தனக்கு பிள்ளை பிறக்குமோ என்று சொல்வானேன்? கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? குறித்த காலத்தில் திரும்பவும் உங்களிடத்திற்கு வருவேன். அப்போது சாராளுக்கு ஒரு பிள்ளை (குமாரன்) இருப்பான் என்றார். இதன்பிறகு அவர்கள் அடுத்த பட்டணத்தை நோக்கிப் போய்விட்டார்கள்.

குட்டீஸ்களா! நாமும் ஆபிரகாமைப்போல நம் வீட்டிற்கு வருபவர்களை நேசித்து, அவர்களை உபசரிக்க வேண்டும். அப்பொழுது தேவன் நம்மேல் பிரியமாக இருப்பார். ஆமென்.

**மனப்பாட வசனம்: எபிரெயர் 13:2**

"அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு."

— சகோதரி. குயினி பிரதீப்

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. ஏனோக்கு எத்தனை வருடங்கள் கர்த்தருடன் சஞ்சரித்தார்?
2. தாவீதின் அப்பா பெயர் என்ன?
3. தாவீது கோலியாத்தை எதைக் கொண்டு வீழ்த்தினார்?
4. ஆபிரகாம் தேவதூதர்களை உபசரிக்கையில் (உணவு கொடுத்தபோது) அவரது வயது என்ன?
5. கிப்ரோத் – அத்தாவா என்பதன் பொருள் என்ன? ஏன் அந்த இடத்திற்கு அந்த பெயர் வந்தது?

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | A. சுபிக்ஷா | - பெருமாள் வலசு |
| 2. | A. ஹானா ஜோதிராணி | - மதுரை |
| 3. | V. ஏஞ்சல் ஜோயன்னா | - மதுரை |
| 4. | J. நவீன் பீட்டர் | - மதுரை |
| 5. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | - மதுரை |
| 6. | D. டேஃப்னி | - சென்னை |
| 7. | D. ஜுனித்தா | - சென்னை |
| 8. | A. சாம்குமார் | - பெருமாள் வலசு |
| 9. | M. அபி பிலேமோன் | - எழுகம்வலசு |
| 10. | M. ஜோனத்தான் | - கரூர் |
| 11. | S. ஜுடா லியோ | - ரஸ்தா |
| 12. | G. ஜெர்லின் | - ரஸ்தா |

# கிப்ரோத்-அத்தாவா

## எண்ணாகமம் 11ம் அதிகாரம்

கடவுளுக்கு பிரியான செல்லப் பிள்ளைகளா! நீங்களெல்லாரும் எப்படியிருக்கிறீர்கள். சுகமாயிருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

பிள்ளைகளா! இந்த மாதம் நாம் ஒரு பைபிள் சம்பவத்தை பற்றி படிக்க இருக்கிறோம். கிப்ரோத்-அத்தாவா என்பது இஸ்ரயேலர் பாலைவனத்தில் பயணிக்கும்போது ஏற்பட்ட ஒரு சம்பவத்தைக் குறிக்கிறது. இந்த இடம், 'ஆசையின் கல்லறைகள்' என்று பொருள்படும்.

இஸ்ரயேல் மக்கள் வனாந்திரப் பிரயாணத்திலே வரும்போது அவர்களுக்கு தேவன் வானத்தின் மன்னாவை (தூதர்களின் உணவு என்று சொல்லப்படுகிறது) உணவாகக் கொடுத்து, பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பத்தையும் கொடுத்து அவர்களை பாதுகாப்பாக வழிநடத்தி வந்ததை நாம் படிக்கிறோம் அல்லவா!

ஆனால் பாருங்கள் குட்டீஸ்! இந்த மக்களிடையே கர்த்தரைக் குறித்த ஒரு நன்றியுணர்வு இல்லாமலும், அவிசுவாசமாய் எங்களுக்கு இது எதற்கு? என்றார்கள். நாங்கள் எகிப்து தேசத்தில் இருக்கும்போது நிறைய விதவிதமான சாப்பிட்ட வெள்ளரிக்காய், வெங்காயம், பூண்டு, மச்சங்கள் (இறைச்சி) இவைகளெல்லாவற்றையும் சாப்பிட்டோம், அவற்றை இப்பொழுது நினைத்துப் பார்க்கிறோம். ஆனால் கர்த்தரோ இந்த வனாந்திரத்தில் மன்னாவை தவிர வேறு உணவுகளை தரவில்லையே என்று அவைகள் கிடைக்காததால் சலிப்படைந்தார்கள், முறுமுறுத்தார்கள்.

அவர்கள் இதைக்குறித்து மோசேயிடம் கோபத்தோடு முறையிட்டார்கள். அவைகளை கர்த்தர் கேட்டு, இஸ்ரயேலர்களுக்குக் காடை இறைச்சியை மிகவும் திரளாக அனுப்பினார். அவர்கள் காடையை அளவுக்கு அதிகமாக உண்டதால், கர்த்தர் அவர்கள் மீது கோபப்பட்டு, அவர்களில் பலரை நோயினால் வாதித்தார். அதனால் அவர்களின் அநேகர் உயிரிழந்து அந்த இடத்திலே அடக்கம் பண்ணப்பட்டார்கள். அந்த இடம் 'கிப்ரோத்-அத்தாவா' என்று அழைக்கப்பட்டது. இதற்கு 'ஆசையின் கல்லறைகள்' என்று பொருள்.

குட்டீஸ்! இந்த சம்பவத்திலிருந்து என்ன கற்றுக் கொள்கிறோம்? கர்த்தர் இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டு வருவதற்கு முன்னே அவர்களின் தேவைகளை நன்கு அறிந்திருந்தார். அதனையெல்லாம் அவர் முன்னதாக ஆயத்தப்படுத்தியிருந்தார். எந்த நேரத்தில் என்னென்ன அவர்களுக்கு தேவை என்பது கர்த்தருக்கு தெரியாதா! என்ன? அவர்கள் ஏற்ற நேரங்களிலேயும், சமயத்திலேயும் கர்த்தர் தங்களுக்குத் தருவார் என்ற விசுவாசமாய் இல்லாமல் அவிசுவாசமாய் இருந்து கர்த்தரை அந்த வனாந்திர வழி பிரயாணங்களிலே பரீட்சை பார்த்து, கோபப்படுத்தினபடியால் இவ்வளவு பெரிய வாதைகளும், உயிரிழப்புகளும் உண்டானது என்பதை நாம் படிக்கிறோம்.

பிள்ளைகளா! கர்த்தர் நமக்கு என்ன தேவை? எப்பொழுது தேவை? என்பதை அவர் அறிந்திருக்கிறபடியால் நமது பெற்றோரைக் கொண்டு நிச்சயமாய் சந்திப்பார் என்ற விசுவாசமாய் இருந்தால் ஏற்ற நேரத்திலே அபரிவிதமான நன்மைகளை கர்த்தர் நமக்கு தருவார். மாறாக, இஸ்ரயேல் மக்களைப்போல நாம் அவிசுவாசமாய் அதைக் கொடு, இதைக் கொடு என்று சொல்லக்கூடாது. அப்படியே பொறுமை யோடுகூட இருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்வோம். ஆமென். அடுத்த இதழிலே சந்திப்போமா...



**மனப்பாட வசனம்: 1பேதுரு 5:6**

"ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்."

– சகோ. ஜான் செல்லையா

# ஜுலை மாத கேள்விகள்

(ரோமர் புத்தகத்தில் இருந்து)

1) நமது அவயவங்களை எதற்கு, எப்படி ஒப்புக்கொடுக்கக் கூடாது?
2) எதை நடப்பிக்கும்படி நம் அவயவங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும்?
3) நாம் எதினின்று விடுதலையாக்கப்பட்டு, எதற்கு அடிமைகள் ஆனோம்?
4) தேவனுக்கு அடிமைகளானதால் கிடைக்கும் பலன் என்ன?
5) நாம் எதினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தோம்?
6) நாம் யாருக்கென்று கனி கொடுக்கும்படி, எதற்கு மரித்தோம்?
7) மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது எது?
8) நாம் எதினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தோம்?
9) நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை – நான் யார்?
10) பவுல் தன்னை யாரென்று சொல்கிறார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-08-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. ரோமர் 4:17 | 6. ரோமர் 5:15 |
| 2. ரோமர் 4:19 | 7. ரோமர் 5:20 |
| 3. ரோமர் 4:20 | 8. ரோமர் 6:3 |
| 4. ரோமர் 5:5 | 9. ரோமர் 6:6 |
| 5. ரோமர் 5:8 | 10. ரோமர் 6:12 |

## சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்


| | | |
|---|---|---|
| 1) | Mrs. தெல்மா ஸ்டான்லி | - மதுரை |
| 2) | Mrs. பியூலா ஜேசுராஜன் | - புதுவை |
| 3) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | - மதுரை |
| 4) | S. ஷீபா ஞானவின்சா | - டோனாவூர் |
| 5) | J.V. சுந்தரபாய் வில்லியம் | - சேலம் |
| 6) | Mrs.P. சமாதானம் பீட்டர் | - விருதுநகர் |
| 7) | Mrs. A. இமல்டா சுந்தர்சிங் | - ஈரோடு |
| 8) | C. வைலட் கிறிஸ்டோபர் | - தளவாய்புரம் |
| 9) | A. லலிதா | - புதுக்கோட்டை |
| 10) | P. ரேச்சல் ஜானிமா | - நெல்லை |
| 11) | A. டேவிட் ஜெயசந்திரன் | - மதுரை |
| 12) | Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் | - தூத்துக்குடி |
| 13) | Mrs. இந்திரா பாண்டி | - மதுரை |
| 14) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | - சேலம் |
| 15) | M. பியூலா சாந்தி | - ஈரோடு |
| 16) | Mrs. குளோரி பால்ராஜ் | - தஞ்சாவூர் |
| 17) | A. கார்பஸ் பிலேமோன் | - மதுரை |
| 18) | M. ராஜா | - கரூர் |
| 19) | Mrs. C. வள்ளி சிதம்பரம் | - கரூர் |
| 20) | G. ஏஞ்சலம்மாள் | - மதுரை |
| 21) | Y. ஜெயசுதா பொன்செல்வி | - சென்னை |
| 22) | Mrs. R. சரோஜா | - தென்கலம் |
| 23) | S. அசோக்குமார் பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 24) | Mrs. சாந்தி ஜோயல் | - திருச்சி |
| 25) | Mrs. மேரி ராஜ் | - மதுரை |
| 26) | M. ஈஸ்வரி முருகன் | - கரூர் |
| 27) | S. டேவிட் சாந்தகுமார் | - வல்லம் |
| 28) | A. ரோஸ்மேரி | - சென்னை |
| 29) | Mrs. தேவி ராஜாசிங் | - திருப்பூர் |
| 30) | S. கார்த்திக் | - கரூர் |
| 31) | Mrs. சூரிய பிரியா | - மதுரை |
| 32) | M. அன்பழகன் | - தங்கமேடு |
| 33) | P. ஷைனி | - காங்கேயம் |
| 34) | Mrs.D. குளோரி திலகவதி | - சென்னை |
| 35) | Mrs. J. பூங்கொடி | - முத்தூர் |
| 36) | S. பேபி சந்தோஷ்குமார் | - தங்கமேடு |
| 37) | V. மைனாவதி வசந்த் | - தங்கமேடு |
| 38) | Mrs. சாந்தி வில்லியம் | - புதுக்கோட்டை |
| 39) | D.I. அன்பு சுதந்திரம் | - ஏர்வாடி |
| 40) | Mrs. பெரில் பாஸ்கர் | - படப்பை |
| 41) | R. ஞானசிரோன்மணி | - மதுரை |
| 42) | Mrs. சாந்தி ஜோயல் | - திருச்சி |
| 43) | M.S. ஜேம்ஸ் | - திண்டுக்கல் |
| 44) | Mrs. ஹெலன் திலக் | - தூத்துக்குடி |
| 45) | J. ஜான்சி | - ஆனைமலை |
| 46) | A. அரவிந்த் | - மதுரை |
| 47) | D. சந்திரன் மோசஸ் | - பெங்களூர் |
| 48) | S. பாக்கியராஜம் | - மதுரை |
| 49) | Mrs. ராணி குமரன் | - கரூர் |
| 50) | Mrs. ஹெப்ஸிபா தாமஸ் | - படப்பை |
| 51) | Mrs. ஜெயந்தி செல்வகுமாரி | - தரங்கம்பாடி |
| 52) | N. ஜான் செல்லையா | - மதுரை |
| 53) | J. ஜெயராணி ஜான் | - மதுரை |
| 54) | Mrs. ஆட்லின் ஆனந்தன் | - மதுரை |
| 55) | Mrs. பட்ரிசியா டேவிட் | - சேலம் |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : **45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at **THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 📖 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2024 - 2026**
**Date of Publication : 9th July 2025**
**Posted at Arasaradi HPO on 10th & 11th July 2025**


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்






அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!


## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH










AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers